Registered As Catholic Weekly

# பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர்: 123 — 21—02—1997

இதழ்: 2 — விலை 5

பொது சன நூலகம்
25 FEB 1997
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

### அருள் வாக்கு

கொடுமைத் தளைகளை அவிழ்ப்பதும்
நுகத்தின் பிணையல்களை அறுப்பதும்
ஒடுக்கப்பட்டோரை விடுதலை
செய்து அனுப்புவதும்,
எவ்வகை நுகத்தையும்
உடைப்பதும் அன்றோ
நான் தேர்ந்து கொள்ளும் நோன்பு!

(எசாயா 58 : 6)

# இயேசுவின் உயிர்ப்பு விழாவில் முழுமையாகப் பங்கெடுப்போம்

—யாழ் ஆயர் அழைப்பு

எல்லையற்ற அன்பும், இரக்கமும் நிறைந்த ஆண்டவர் இந்தப் புதிய வருடத்திலும் நாம் பாவங்களிலிருந்து மனம் திரும்பி தம்முடன் ஒப்புரவாக இத்தவக்காலத்தை நமக்கு அருளியுள்ளார். இயேசுக்கிறிஸ்துவோடு மரித்து, அவரிலே உயிர்பெறுதலையே அன்னையாம் திருச்சபை இத்தவக்காலத்தில் வேண்டி நிற்கின்றது. இதற்கு எமது முயற்சிகள் யாவும் கிறிஸ்துவின் பாஸ்காப்பயணத்தோடு இணைக்கப்படுதல் அவசியம் என்று இத்தவக்காலத்துக்கான மடலில் யாழ் ஆயர் அழைப்பு விடுத்துள்ளார்.

இன்னும், கிறிஸ்து யேசுவை இறைவார்த்தையிலும், சிறப்பாக நற்செய்திப்பகிர்விலும் அடையாளம் கண்டு அனுபவித்து, அதன் வழி உருவாகுகின்ற குழுமங்களை ஊக்குவிப்பது நம் ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும் என்பதை இம்மடலில் வலியுறுத்தியுள்ளார்.

## யாழ் மறைமாவட்ட ஆயரான இ. தோமஸ் சவுந்தரநாயகம் குருக்கள், துறவியர், பொது நிலையினரான இறைமக்களுக்கு விடுக்கும் தவக்கால மடல்

கிறிஸ்துவில் அன்பார்ந்த இறைமக்களே,

நம் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து மனித வரலாற்றில் உதித்த 2000ம் வருடங்களின் நிறைவுஅண்மித்துக் கொண்டிருக்கின்றது. பரிசுத்த தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர் இந்நிறைவின் நிகழ்வை மாபெரும் யூபிலி ஆண்டாக பிரகடனப் படுத்தியுள்ளார். இதை முன்னிட்டு முழுத் திருச்சபையுடன் இணைந்து நாமும் எம்மை தயார் படுத்திக்கொண்டிருக்கின்றோம். இரண்டு வருடங்களின் முன்பு இவ்விடயமாக சுற்று மடல் மூலம் ஆயத்தப்படுத்த அழைப்பு விடுத்திருந்தோம். இவ்வாயத்தத்தின் இரண்டாம் கட்டத்துள் நுழையும் இத்தருணத்தில், இறைமக்கள் அனைவரும் துரித ஆனால் ஆழமான ஆயத்தத்தில் ஈடுபடக் கோருகின்றோம். யூபிலி ஆண்டின் முதல் வரும் மூன்று ஆண்டுகளும் சிறப்பான தயாரிப்புக் காலமாகத் தரப்படுகின்றது. எனவே இக்காலப் பகுதியில் பரிசுத்த பரம திரித்துவத்தின் மறைபொருளை மையமாக வைத்து, தியானித்து, எமது விசுவாசத்தை ஆழப்படுத்தி, எம்மை புதுப்பிக்க அழைத்து நிற்கின்றோம்.

**இயேசுக் கிறிஸ்து – நேற்றும் இன்றும் நாளையும் (எபி 11:8)**

எம் ஆண்டவரும் இயேசுக்கிறிஸ்துவுமாகிய மறைபொருள், இவ்வாண்டின் எமது சிந்தனைக்கும், செபத்துக்கும், வாழ்வுக்கும் ஊற்றாக நிறுத்தப்படுகின்றார். நற்செய்தி, திருவழிபாடு, திருவருட்சாதனங்கள் வழியாகவும், அன்பு நிறை சாட்சிய வாழ்வாலும், அவருடன் நெருக்கமான உறவு கொள்ளவும், அவர் அளிக்கும் மீட்பின் பலன்களை எம்மில் கண்டுணரவும், திருச்சபை இவ்வருடத்தில் சிறப்பான அழைப்பை வேண்டி நிற்கின்றது. ஆகவே, இத்தவக்காலத்தில் இயேசுக் கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை கொண்டாடும் பாஸ்கா நிகழ்வுக்கு எம்மைத் தகுதியாக ஆயத்தப்படுத்தி, ஒவ்வொரு கிறிஸ்தவனும் தான் பெற்ற மீட்பின் அனுபவத்தை புதுப்பித்துக் கொள்ள எதிர்பார்க்கப் படுகின்றான்.

எனவே இங்கு தனிப்பட்ட வாழ்வையும், சமூக-வாழ்வையும் மீளாய்வு செய்வது, குறை குற்றங்களை இனங்கண்டு கொள்வது, அவற்றிற்காக மனம் வருந்தி இறைவனுடைய இரக்கத்தையும், மன்னிப்பையும் பெறுவது அத்தியாவசியமாகின்றது. இவற்றோடு இயேசுவின் மரணத்தை மீண்டும் மீண்டும் தியானித்து, நாம் அனுபவித்த, அனுபவிக்கின்ற துன்பங்களுக்கு பொருள் கொடுப்பதாக, இயேசுவின் பாடுகளை அவற்றுடன் இணைத்து மீட்பின் பயனைப் பெறுவோம்.

**திருமுழுக்கு – புதுவாழ்வை நிறைவாக்கும் ஓர் அருட்சாதனம்**

திருமுழுக்கின் சாரமாக அமைவது இயேசுக்கிறிஸ்துவோடு மரித்தலும், அவரில் உயிர் பெறுதலும். தவக்காலம்

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

## மீண்டும் "FRATERNITY"

யாழ் மறை மாவட்டத்தில் பணியாற்றும் குருக்களுக்கான மும் மாத ஆங்கில செய்திப் பத்திரிகை மீண்டும் வெளி வர இருக்கிறது. பாஸ்கா சிறப்பிதழாக ஏப்பிரல் மாதமுற்பகுதியில் வெளி வர இருக்கும் இவ்விதழுக்கு யாழ் மறைமாவட்டக் குருக்கள், யாழ் மறைமாவட்டத்தில் பணியாற்றும் குருக்கள் துறவிகளிடமிருந்து ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகிறது.

பங்குத் தந்தையர்கள், நிறுவனங்களில் பணியாற்றும் குருக்கள் மறைக்கோட்ட முதல்வர்கள், ஆணைக்குழுக்களின் தலைவர்கள், அமதி.

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## திருச்சிலுவை கன்னியர் சபைக்கு புதிய தலைவி

இலங்கை திருச்சிலுவைக் கன்னியர் சபையின் புதிய தலைவியாக அருட்செல்வி ஐடா தோமஸ் நியமனம் பெற்றுள்ளார். யாழ் திருச்சிலுவைக் கன்னியர் சுக நல நிலையத்தில் நீண்ட காலம் பணியாற்றிய பின் தற்போது திருமலை - மட்டுநகர் மறை மாவட்டத்தில் பணிபுரியும் அருட் செல்வி ஐடா தோமஸ், கடந்த ஆறு ஆண்டுகளாக சபையின் தலைவியாகப் பணிபுரியும் அருட் செல்வி செலின் கோமஸ்சிடம் இருந்து தலைவி பதவியையும், அதற்கான பணிகளையும் பெற்றுக் கொள்ளுவார். இவரின் ஆலோசகர்களாக அருட் செல்விகள் நீற்றா, மேரி பேணாடா ஜெம்மா, கில்டா ஆகியோர் பணியாற்றுவர். பணி சிறக்க பாதுகாவலன்'' வாழ்த்துகிறான்.

## கனகத்தூதனின் ஆயர் சிறப்பிதழ்

இடம் பெயர்ந்து கனடாவில் வசிக்கும் தமிழ் கத்தோலிக்கர்களுக்கென பிலிப் அன்ரன் சின்னராசாவை ஆசிரியராகக் கொண்டு கனடாவில் இருந்து வெளிவரும் தமிழ் கத்தோலிக்க காலாண்டுச் சஞ்சிகை, தனது 8. 9. 96 இதழை ஆயர் சிறப்பிதழாக வெளியிட்டுள்ளது.

கடந்த ஆண்டு திருத்தந்தையைச் சந்திக்க உரோமாபுரி சென்ற யாழ் ஆயரும், மன்னார் ஆயரும் புலம் பெயர்ந்து கனடாவில் வசிக்கும் தமிழ் மக்களின் நிலமை

(தொடர்ச்சி 6ஆம் பக்கம் )

ஊர்காவற்றுறை

## புனித அந்தோனியார் ஆலயத்தில் மீண்டும் வழிபாடுகள் ஆரம்பம்

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலயம் மீண்டும் வழிபாட்டுக்குரியதாக புனரமைக்கப் பட்டுள்ளது. கடந்த 7 வருடங்களாக போர் அனர்த்தங்களால் தாக்கப் பட்டு பொலிவிழந்து காணப் பட்ட இவ்வாலயம் அங்குள்ள இராணுவ அதிகாரி கேணல் B.B.S மெண்டிஸ் அவர்களின் ஒத்துழைப்பினால் 02- 02- 1997 அன்று திருப்பலி ஒப்புக் கொடுக்கக் கூடியதாக மாற்றப்பட்டுள்ளது. அன்று திருப்பலி நிறைவேற்றி அருளுரைவழங்கிய அருட்திரு E. J. அருமைநாயகம் இறை மக்களாகிய நாங்கள் இறைவனை ஆலயத்திலும் அயலவரிலும் முழுமையாகக்காண சிமியோனைப்போல் தாகங் கொள்ள வேண்டுமென்று கூறினார். இந் ஞாயிறு தினத்திருப் பலியில் எழுவைதீவு, அனலை தீவு, நாரந்தனை, கரம்பொன் போன்ற பகுதிகளிலுமிருந்து நூற்றுக்கணக்கான மக்கள் பங்கு கொண்டார்கள். அருட் திரு. சால்ஸ்கொலின்ஸ் அருட் திரு. இயூஜின் பிரான்சிஸ்

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## அருள்திரு லோப்பு காலமானார்

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட அருள்திரு. இராயப்பு லோப்பு அடிகளார் 17-1-97இல் திருமலையில் காலமானார்.

1938ஆம் ஆண்டில் பிறந்த அருள்திரு. லோப்பு அடிகளார் மட்டுநகர் புனித மரியாள் ஆலயத்தில் உதவி பங்குத்தந்தையாகவும், வீச்சுக்கல்முனை தாண்டவன் வெளி, தன்னாமுனை, கல்முனை, உவர்மலை போன்ற பல பங்குகளிலும் பணியாற்றி தொண்டன், பற்நியூஸ் ( Bat. News ) வெளியீடுகளின் ஆசிரியராகவும் தொண்டாற்றி 6. 1. 95 முதல் திருமலை மறைக்கோட்ட குரு முதல்வராக அரும்பணி புரிந்து 17. 1. 97ல் இறை பதம் அடைந்தார்.

## யாழ் மாகாண அமதிகளின் புதிய முதல்வர்

அருள்திரு பிலிப்பையா இயேசுநேசன் அ.ம.தி. யாழ் மாகாண அமலமரித்தியாகிகளின் புதிய முதல்வராக நியமனம் பெற்றுள்ளார். கொழும்பு மாகாண அமலமரித்தியாகிகள் சபையில் இருந்து யாழ் மாகாணம் 1985இல் பிரிக்கப்பட்ட பின்னர் அதன் ஆலோசகராக ஒன்பது ஆண்டுகள் பணியாற்

(தொடர்ச்சி 6ஆம் பக்கம் )

## "இன்னும் பல ஐம்பது ஆண்டுகள் நினைவு கூரப்பட வேண்டியவரே"

— அருள் திரு. P. யேசுநேசன்

யாழூரெங்கும் ஞானப்பிரகாசியார் பாதம் பதிந்தமண் பெரும் பாக்கியம் பெற்றது, கொழும்புத்துறைச் சூழலிற் கூட அவர் உலாவியிருப்பாரென்பது உண்மை. இன்றும் அவரது தேடற்பணி தொடர்ந்த வண்ணமேயுள்ளது.

இவ்வாறு புனித சவேரியார் குருமண்டபத்தில் தைத்திங்கள் 26-1.97 ஞாயிறு நிகழ்ந்த ஞானப்பிரகாசர் நினைவு விழாவில் உரையாற்றிய ஆசிரிய ஆலோசகர் ஜெயராமசர்மா அவர்கள் குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் பேசுகையில் மதம் கடந்த நிலையில்'

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

திருக்குடும்பச்சபையின் சிறப்பு உள்ளே

பொது சன நூலகம் யாழ்ப்பாணம் ... ஒளி நூலகம்

# இயேசுவின் உயிர்ப்பு...

வேண்டி நிற்பதும் இதுவே. அதாவது திருமுழுக்கினால் பெற்ற புதுவாழ்வை தியானிப்பதும், மீள அனுபவித்தலும். எனவே இங்கு எமது முயற்சிகள் அனைத்தும், கிறிஸ்துவின் பாஸ்கா பயணத்தோடு இணைக்கப்படுதல் அவசியமாகின்றது. வழிபாடுகள், செபங்கள், சிலுவையின் சிந்தனைகள், நோன்புகள், பிறரன்புச் செயல்கள் அனைத்தும் எம்மை புதியவராய் வாழத் தூண்ட வேண்டும். அதன்வழி, திருமுழுக்கு என்ற அருட்சாதனத்தினூடாக நாம் பெற்ற புதுவாழ்வை மீளவும் அனுபவித்து, பாஸ்கா இரவில் நாம் கொடுக்கும் வாக்குறுதிகளை அர்த்தமுள்ளதாக்குவோம். இயேசுவினுடைய பாலைவன அனுபவம், எங்களுடைய அனுபவமாகி, அது தரக்கூடிய ஆன்மீக பலத்தில், எம்மை ஆட்கொள்ளக்கூடிய சோதனை, வேதனைகளில் இருந்து விடுதலை பெறுவோம்.

### சிறிய கிறிஸ்தவ குழுமங்கள் — இன்றைய உடனடித் தேவை

நீண்ட நோக்கில், திருச்சபையின் முகம் எவ்விதம் இருக்கும் என்ற கணிப்பில், குழுவாழ்வின் முக்கியத்துவம் உணரப்படுகின்றது. இறைவார்த்தையிலும், பகிர்தலிலும், அன்புறவிலும் குழுமங்களை உருவாக்குகின்ற முயற்சியில் திருச்சபை விரைந்து சென்று கொண்டிருக்கின்றது. அளப்பெரும் செல்வமாகிய இயேசுக் கிறிஸ்துவை இறைவார்த்தையிலும், சிறப்பாக நற்செய்திப் பகிர்விலும் அடையாளம் கண்டு, அனுபவித்து அதன்வழி உருவாகின்ற குழுமங்களை ஊக்குவிப்பது, எமது ஒவ்வொருவருடைய கடமையுமாகும். இதை உறுதிப்படுத்துவதாக இன்று எங்களுடைய பங்குகளில் ஆழமான இறை உணர்வை பெறும் பொருட்டு சிறிய கிறிஸ்தவ குழுமங்களை அமைப்பது இன்றியமையாதது, மேலும் இதற்கு ஆரம்பப் படிமுறையாக இல்லங்களில் சில குடும்பங்கள் கூடி, இறைவார்த்தையைப் பகிர்ந்து, செபித்து, செயல்ப்படும் ஆக்கபூர்வமான திட்டங்களை கட்டியெழுப்புவோம். இம்முயற்சிகளில் எழக்கூடிய சிக்கல்களைக்கண்டு பின்வாங்காது, அவற்றை ஒரு நிலையில், வளர்ச்சியாக எடைபோட்டு, கிறிஸ்தவ குழுமங்களை அமைத்து எமது பங்குகளைப் புதுப்பிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபடுவோம்.

### புலம்பெயர்வு - எமது பயன்மிக்க அனுபவமானதா?

கடந்த வருடங்களில் எம்மில் பெரும்பான்மையோர், எமது சொந்த இடங்களைவிட்டு, பொருட்களை இழந்து, புலம் பெயர்ந்து வேற்று இடங்களில் அகதிகளாக, துன்புற்று வாழ்ந்தது, என்றும் மறக்க முடியாதது. யாழ் திரும்பியும் எம்மில் பலர் இன்னும் தங்கள் சொந்த இடங்களுக்கு போக முடியாத துர்ப்பாக்கிய நிலை. ஏரிக்கடலைக் கடந்து சென்ற எம்மில் அநேகர், இன்னும் தம் இருப்பிடங்களுக்கு திரும்ப முடியாது அல்லலுற்று அவதியுறுகின்றனர் என்பது யதார்த்தமானது. இருந்த பொழுதிலும், மாபெரும் புலம்பெயர்வு எமக்கு கற்று தந்தது பலப்பல என்பது கண்கூடு. எம் ஏற்றத்தாழ்வுகளை மறந்து ஒன்றாய் கூடி வாழ்ந்தோம். ''நான்'' ''எனது'' ''எங்களுடையது'' ''எம்முடையவை'' என்ற குறுகிய எல்லைகளைத் தாண்டி, அனைவரும் ஒரே குடும்பத்தினர் என்ற பரந்த நோக்கில் வாழ்ந்தோம். எமக்கு இடம் தந்து வரவேற்றவர்கள் பலர், உதவிக்கரம் கொடுத்து, தம்முடையவைகளைப் பகிர்ந்து கொண்டு உபசரித்தவர்கள் எண்ணிலடங்காதவர். ஆலயங்கள் முதலாய் மத பேதமின்றி இருந்தோம், வாழ்ந்தோம். இவைகள் கற்கள் மேல் பொறித்த அனுபவங்களாகி அதே பாணியில் வாழ, உந்து சக்தியாக அமையவேண்டும். மீளக் குடியமர்ந்தாலும் இம்மனநிலைகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வோம். மனித நேயம் மிக்கவர்களாய் கிறிஸ்துவின் எல்லையற்ற அன்பைப் பின்பற்றுவோம்.

### உழைப்போம் சமாதானத்திற்காக

எம்மில் பெரும்பான்மையானவர்கள் மீண்டும் எம் இல்லிடம் திரும்பியுள்ளோம். சிதைவுற்ற வாழ்வை சீர் செய்வதில் தொடர்ச்சியாக முனைந்துள்ளோம். எனினும் எமது உரிமைகளைப் பெறுவதற்கான முயற்சிகள் இன்னும் முற்றுப் பெறவில்லை. சொல்லொண்ணாத் துயரங்களையும், பல்வேறு இழப்புக்களையும் அனுபவித்த நாம் அவைகளை வெறுமனே நிகழ்வுகளாகப் பார்க்காது, நடைமுறைப் பிரச்சனைகளாக நோக்கி அவற்றின் தீர்வுக்குப் பாடுபடுபவர்களாக மாறுவோம். நல்லெண்ண சமிக்கைகள் தோன்றவும், நீதியோடு கூடிய அமைதி ஏற்படவும் தொடர்ந்து செபிப்போம், செயல்படுவோம். எம்மைப் பிரிந்து வன்னிப் பிரதேசத்தில் வாழும் எமது உடன்பிறப்புக்களை மறந்து விடாது, அவர்கள் அனுபவிக்கக்கூடிய ஒவ்வொரு பிரச்சனையிலும், அவர்களோடு இருக்கின்றோம் என்ற உணர்வைக்காட்டுவோம். உரியவர்களிடம் நிவாரணங்களைக் கோரி, உடனடித் தேவைகளை சமூக மட்டத்தில் நிவர்த்தி செய்ய எத்தனிப்போம்.

### செயற் திட்டம்

— ஒவ்வொரு பங்கிலும் குருக்கள், துறவிகள், பொதுநிலையினரைக் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டு, பங்கு மட்டத்தில் யூபிலி ஆண்டிற்கான பணிகள் தொடரப்பட வேண்டும்.

— மக்கள் தொகையினடிப்படையில், பங்குகளில், சிறிய சிறிய குழுக்கள் பிரிக்கப்பட்டு, யூபிலி ஆண்டின் சிந்தனைகளை உள்வாங்குகின்ற அளவில், அக்குழுக்கள் தம்முள் பகிர்ந்து இறைவார்த்தை வழியாக புதுப்பித்துக் கொள்கின்ற நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

---

அடுத்த இதழ்

பாஸ்கா சிறப்பு இதழாக மலரும். அதற்கான ஆக்கங்களை 05-03-97 க்கு முன்னதாக அனுப்பி வையுங்கள்.

(ஆ-ர்)

---

# இன்னும் பல...

தமிழன்னையின் புகழ்பரந்திட அவர் படைத்த நூல்களே அனந்தம் என்று கூறுவதும் மிகையன்று.

இன்று பல்கலைக் கழகப் பட்டதாரிகளாக வெளியேறுபவர்கள் கூட ஞானப்பிரகாசியாரைத் தெரியாதெனப் பதிலளிப்பது மிகவேதனைக் குரியது. தமிழ் கற்கும் மாணவர்கள், தமிழை அழகு செய்து தமிழாய்வுக்கு வழிகாட்டிய ஒளி விளக்கின் பிரகாசத்தை அறியாதிருக்கலாமா?

மதம், மொழி, அரசியல், விஞ்ஞானம், சமூகவியல், சமுதாயம் எனப் பலதுறைகளிலும் புகுந்து மக்கள் நலங்கருதி அடிகளார் புரிந்த அரும் பணிகளை நினைந்து. நன்றிக் கடனாற்ற வேண்டும். எம் வாழ்வை வளமாக்க வேண்டும். பயனற்ற செயல்களில், ஆடியோடித் பாடியலைவதில் நாம் காட்டுகின்ற ஆர்வத்தைப் புறந்தள்ளி எமது நாடித்துடிப் பறிந்து, நமது வாழ்வின் ஆரோக்கியத்துக்காக வாடித் தவங்கிடந்த பெருமகன் வைத்துச் சென்ற கருவூலங்களைத் தேடிப் பயன் பெற வேண்டும் என்றார்.

குருத்துவக் கல்லூரியின் அதிபர் அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை வரவேற்புரை வழங்க ஞானப்பிரகாசியார் சிலைக்கு மாலைபுனையப்பட்டு வரவேற்பு நடனத்துடன் விழா கால் கோளாயிற்று.

பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட அருள்திருயேசுநேசன் அ.ம.தி. அடிகளார் சுருங்கக் கூறி விளங்கவைக்கும் சுவாமியாரின் அரும்பண்பை நாமும் பாதுகாத்தல் வேண்டும். இன்னும் பல ஐம்பது ஆண்டுகள் அவர் நினைவு கூரப்படத் தக்கதான செயற்பாடுகள் நம்மகத்தே நிலவ வேண்டும் என்றார்.

ஈழம் தந்த இருமலர்கள் நூலைத்தந்த திரு. சூ. யாக்கோபு எழுதிய சுவாமி ஞானப்பிரகாசரின் வாழ்க்கை வரலாறாகிய விடிவெள்ளி என்னும் நூலை அருள்திரு. யேசுநேசன் வெளியிட்டு வைத்தார்.

இறுதிக் கலைநிகழ்ச்சிகளாக பாஷையூர், பாண்டியன்தாழ்வு புனித சூசையப்பர் பங்கு மக்களின் நடனம், வில்லுப் பாட்டு, நாடகங்களும், குருத்துவக் கல்லூரி மாணவர்களின் 'தேடல்' என்னும் உரை நாடகம் இடம் பெற்றன.

---

# "யூபிலி ஆண்டு எண்டா என்ன அண்ணே ...?"

*யூபிலி ஆண்டுபற்றிய விளக்கங்களைத் தரவும், கேள்விகளுக்குப் பதில் கொடுக்கவும் திருவழிபாட்டு ஆணைக் குழுவால் இப்பகுதி அமைக்கப்படுகிறது. கேள்வி - பதில் முறையில் அமைக்கப்படும் இப் பகுதியில் யூபிலி ஆண்டு பற்றி இறை மக்கள் அறிய வேண்டிய முழுவிளக்கங்களையும் தர முயல்வோம். யூபிலி ஆண்டு பற்றிய உங்கள் சந்தேகங்களையும் கேள்விகளையும் தயவு செய்து எழுதி அனுப்புங்கள். தெளிவான பதில் தர முற்படுவோம். கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:- யூபிலி ஆண்டு கேள்வி பதில், ஆயர் இல்லம் யாழ்ப்பாணம்.*

அருள்திரு
ரூபன் மரியாம்பிள்ளை

1. நாங்கள் எல்லோரும் இடம் பெயர்ந்து ஓடித்திரிய நீங்கள் திடீரென யூபிலி ஆண்டு என அறிவிக்கிறிங்களே. எமக்கு ஒன்றுமே புரியவில்லை. தெளிவாக ஏதும் சொல்லுங்கோ...?

தெளிவாகச் சொல்லத்தான் ஆரம்பிக்கிறோம். நாங்கள் எல்லாரும் ஓடித் திரிஞ்சது உண்மைதான். இன்னும் ஓடித்திரியும் நிலை முடியவும் இல்லை. எப்ப முடியுமோ தெரியாது. நமது ஓடித்திரிவுகளுடன் ஆண்டும் ஓடி விட்டது.

நாங்கள் திடீரென யூபிலி ஆண்டை அறிவிக்க இல்லை. யூபிலி ஆண்டு முன்பே எதிர் பார்க்கப்பட்டு தயாரிக்கப்பட்டதொன்று. ஏற்கனவே கூட்டங்கள், கருத்தரங்குகள் நடத்தப் பட்டுள்ளன. ஆனால் இவை அதிகம் உங்களை வந்து சேரவில்லை. திருத்தந்தை ஏற்கனவே திருமடல் ஒன்றையும் எழுதி உள்ளார்.

நாங்கள் மட்டும் இந்த 2000 ஆண்டை எதிர் நோக்கி ஆயத்தங்கள் செய்யவில்லை. இந்த 2000 ஆண்டை எதிர் கொள்ள அரசியல் பொருளாதார ரீதியாக பல ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.

இருப்பினும் இந்த 2000 ஆண்டு கிறிஸ்தவர்களான எமக்கு மிக முக்கியமானது. கிறிஸ்துவிற்கு முன் கிறிஸ்துவிற்குப் பின் என்று காலக் கணிப்புச் செய்வது கிறிஸ்துவுடன்தான் ஆரம்பமானது. கிறிஸ்து பிறந்து 2000 ஆண்டுகள் கடந்து விட்டன என்று பல முறை பிரசங்கங்களில் கேட்கிறோம் அல்லவா? சுருக்கமாகச் சொன்னால் கிறிஸ்து பிறந்து 2000 ஆண்டை இன்னும் மூன்று ஆண்டுகளில் அடையப் போகிறோம். அந்த ஆண்டை யூபிலி ஆண்டாகவும் — புனித ஆண்டாகவும் கொண்டாட, எம்மைத் தயார் படுத்த 97, 98, 99ஆம் ஆண்டுகளைப் பயன்படுத்தும்படி திருச்சபை கேட்டு நிற்கிறது. ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒரு கருப்பொருளும் ஆயத்த வழிபாட்டு முறைகளும் தரப்பட்டுள்ளன.

ஆனால் இப்போ கேள்வி கேட்ட குற்றத்திற்கு நீர் செய்ய வேண்டிய வேலை ஒன்று உள்ளது.

கிறிஸ்து சகாப்தத்தின் 3வது ஆயிரம் ஆண்டிற்கான பரிசுத்த தந்தை 2 ஆம் அருள் சின்னப்பர் இயற்றிய செபம் ஒன்று உண்டு. அதனை 18/6/93 இல் யாழ் ஆயர் அவர்கள் தமிழில் அச்சிட்டு எல்லோரும் செபிக்கும்படி அழைப்பு விடுத்திருக்கிறார். அதனை ஒரு ரூபா கொடுத்து சொல்லத் தொடங்குங்கள். தனிமையாகவும் குழுவாகவும் சொல்லத்தக்க இந்த செபத்தை சில பங்குகள் ஏற்கனவே சொல்லத் தொடங்கி விட்டன.

(தொடரும்)

---

# கடவுளுக்கு....

இறைவனே என்முன் தோன்று, பாவச்சுமை கொண்ட எனதிதயம் தினம் ஏங்குதே உனைக்காண, ஒரு தரம் வந்தால் போதும். மனம் உருகிடும் தீமுன் நெய்யாய், உனது ஒளி பட்டு எனது உள்ளம் கழுவிய பளிங்காய் மாறும்.
பாவியென்றெனை வெறுத்தால் வேதனைத்தீயினில் நான்
சாவதென்ற கல்மனமா உனக்கு, இரக்கமே இல்லையென்றால்
உனக்கு இறைவனென்ற சொல் எதற்கு?
கருணையும் இல்லையென்றால் கடவுளென்ற பெயர் எதற்கு?
கோவிலொன்று ஊரி(லி)ருந்தால் அங்கே தெய்வம் ஒன்று
உண்டு என்பார். ஆனால் பார்க்கிறேன் தினமும் வந்து
காண்கிலேன் உன்னையங்கு, ஏங்கிடும் எனது நெஞ்சம்
மகிழ்வினில் நிறைய இந்தப் பூமிக்கு வருவதெப்போ?
வந்துவிட்டால் இங்கிருப்போர் பல கேள்விக்கணைதொடுப்பர்
என்ற பதட்டமா உனக்கு, கேட்பது நானொருவனல்ல
இப்புவிமக்கள் யாவருந்தான், இடர்படும் எனது வாழ்வு
உன் சுடரொளிபட்டு மகிழ்ந்திடும் நாளதெப்போ?
வானவீட்டி(லி)ருந்திறங்கி இந்தப்பாருக்கு விரைவினில் வா
வந்துபார் உனது கண்ணால் இப்பார்மக்கள் படும் துயரை
பூமியில் உன்வரவால் இடிவீழ்ந்த நாகம்போல
மடியட்டும் கொடியவர்கள். தோன்றிடுமோர் புது உலகம்.

அற்புதம்
செம்பியன்பற்று

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# இறையரசின் 175 ஆம் ஆண்டின் நிறைவை நன்றியோடு நினைவுகூரும்

யாழ் மண்ணில் திருக்குடும்ப சபையினர் காலடி எடுத்து வைத்து. இற்றைக்கு ஒன்றரை நூற்றாண்டுகள் உருண்டோடி விட்டன. அவர்களின் வாழ்வு இலங்கையின் எல்லா மாவட்டங்களிலும் தனது முத்திரையைப் பதித்துக் கொண்டே இருக்கின்றது. இனியும் தொடரும் என்பதைக் கடந்த கால வரலாறுகள் கோடிட்டுக் காட்டுகின்றன.

**சபையின் கால்கோளும் அதன் நோக்கமும் :-**

இச் சபையானது 1820 வைகாசி 28 ந் திகதி அருட்தந்தை பீற்றர் பியன்வெனு நோ ஆய் என்பவரால் மூன்று இளம் பெண்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. இவர்களிடம் அப்பொழுது கையிலிருந்த பணம் ஐந்து பிறாங்க் ( Francs ) மட்டுமே. இக் குழுவினர் '' தேவ பராமரிப்பை '' நம்பி ஏழ்மையிலும் எளிமையிலும்வாழ ஆயத்தமாக இருந்தார்கள். மனித விடுதலைக்காக உழைக்க, இறைவனுக்குத் தங்களை முழுமையாக அர்ப்பணிக்க இம் மூன்று இளம் பெண்களும் முன் வந்தனர். இவர்களுக்கென்று சபை நிறுவுனரால் முன்வைக்கப்பட்ட விருதுவாக்கு ''இறைவன் மாத்திரமே'' என்பதாகும். எல்லாச் சூழ்நிலைகளிலும் விசுவாசத்தைப் பரப்பி உறுதிப்படுத்துவதையும், ஓரே உள்ளமும் ஒரே ஆன்மாவும் கொண்டு விளங்கிய ஆதிக் கிறிஸ்தவர்களின் சாட்சியத்தைப் புதுப்பிப்பதையும் சபை தன் நோக்காகக் கொண்டுள்ளது.

**சபையின் வளர்ச்சிப் பாதையிலே :**

இச் சபையானது பல்வேறு கஷ்டங்களின் மத்தியிலே துரித கதியிலே வீறுநடை போட்டது. பிரான்சியப் புரட்சியால் நாடு சின்னாபின்னம் அடைந்த காலத்திலே மக்களின் தேவைகளுக்கும், அவர்களின் குரல்களுக்குச் செவிசாய்க்க அருட்தந்தை பீற்றர் பியன்வெனு நோ ஆய் அழைக்கப்பட்டார். ஆழமான விசுவாசம், இறைபற்று, செபம், தேவபராமரிப்பில் நம்பிக்கை, ஆன்ம வாஞ்சை, காலத்தினூடாகப் பேசும்




வெளிப்படும் இறைவனைக் காணுந் திறன், அவரின் குரலைக் கேட்கும் மனப்பக்குவம் கொண்ட இந் நிறுவுனர், அக்காலத் தேவைக்கேற்ப ஏழு கிளைகளை நிறுவினார். அக்கிளைகள், அன்றைய தேவைகளைப் பூர்த்தி செய்தது. 1903 இல் நாலு கிளைகளாகிய இச் சபையினர், இன்றைய உலகில் மனித மாண்புக்காக, மனித விடுதலைக்காக உழைத்து, இறையரசைக் கட்டியெழுப்புகின்றனர்.

**சபைக்குள் மிளிரும் பல்வேறு அழைத்தல்கள்**

திருக்குடும்ப சபையில் இன்று அப்போஸ்தலிக்கக்குழு தியான யோகக் குழு, திருமடச் சார்பற்ற குழு, பொதுநிலையினர் குழு என்று பல தரப்பட்ட அங்கத்தவர்கள் தம் அழைப்புக்கேற்ப வாழ்வு நடத்துகின்றனர். அப்போஸ்தலிக்கக் குழுவினர் மனித மாண்பு,முழு மனித விடுதலை, மனிதநேயத்துக்காக உழைக்கின்றனர். காலத்தின் தேவைகள் எவையாயினும், அவ்விடத்தில் இவர்கள் பிரசன்னமாகி, இறையரசின் மதிப்பீடுகளை விதைப்பதிலும் வளர்ப்பதிலும் உறுதிப்படுத்துவதிலும் இவர்கள் அயராது உழைக்கின்றனர். அப்போஸ்தலிக்க செயற்பாட்டுக்கென அர்ப்பணித்துள்ள இச் சகோதரிகளின், தயார் நிலை உண்மையில் பலருக்குப் பல கேள்விக் கணைகளை எழுப்பிவிடுமளவு தாக்கங்களை ஏற்படுத்துகின்றது.

தியான சகோதரிகள், நாளும் பொழுதும் ஆண்டவனிடம் முழு மனித விடுதலைக்காக, மனித நேயம் உலகில் மலர இறையரசின் மதிப்பீடுகளில் ஊறிய வாழ்வை மனிதர் அனைவரும் வாழ கிறீஸ்துவில் அனைவரும் ஒரு குடும்பமாகும் காலம் வரும் வரை மனிதர் அனைவருக்காகவும் செபித்துக் கொண்டிருக்கின்றனர். ஓயாது இறையுடன் ஒன்றித்துக் குரலெழுப்பிக் கொண்டிருக்கின்றனர். உலகில் இருந்து கொண்டே, தம் அர்ப்பண வாழ்வை வாழும் திருமடச் சார்பற்ற சகோதரிகள் உலகிற்குப் புளிக்காரம் போன்று இருந்து திருக்குடும்பத்திடம் விளங்கிய பண்புகளை தம் சொந்த வாழ்வில் வாழ்வதன் மூலம் உலகிற்குச் சக்தியளித்துக் கொண்டிருக்கின்றனர்.

திருக்குடும்பப் பொதுநிலையினர் தம் குடும்பங்களிலிருந்து கொண்டு திருக்குடும்பத்திடம் விளங்கிய விசுவாசம், இறையன்பு பிறரன்பு, மன்னிப்பு மகிழ்ச்சி, சாந்தகுணம், சமாதானம், உண்மை ஆகிய பண்புகளை வாழ்ந்து, அயலில் வாழும் அனைவரும் வாழ ஒளியூட்டுவதன் மூலம் தம் அர்ப்பணத்தை மகிழ்வுடன் வாழ்கின்றனர்.

இத்துடன் இத்திருக்குடும்பப் பண்புகளை தம் வாழ்வின் நிலைகளுக்கு ஏற்ப வாழும் திருக்குடும்பச் சிறார்களும் ஆர்வத்துடன் செயற்படும் திருக்குடும்ப இளம் பெண்களும் எம் சபையை அழகுபடுத்தும் மலர்களே.

அந்த நாள் ஞாபகம் வந்ததே வந்ததே: 175 ஆண்டுகளுக்கு முன் நடந்த அந்தத் தரிசனத்தையும் ஆசீர்வாதங்களையும் இன்று நன்றியோடு நினைத்து நன்றிப் பெருக்கில் புளகாங்கிதம் அடைகின்றனர் திருக்குடும்ப சபையினர்.

அன்று 1822 மாசி 3 திருக்குடும்ப சகோதரிகளின் லொறெற்றோ அன்னையின் சிற்றாலயத்தில் பி. ப. 4. 30 மணியளவில் அருட்திரு தெலோற் நற்கருணை எழுந்தேற்றம் செய்தவுடனே, நற்கருணை அசையத் தொடங்கியது. அந்நேரம் யேசுவின் உயிருள்ள தரிசனத்தை அங்கிருந்தோர் அனைவரும் அநுபவித்தனர். அவருடைய கண்கள் ஒளி வீசின. 30 வயது மதிக்கத்தக்க இளைஞனைப் போல் யேசு காட்சியளித்தார். அவரின் அழகிய கேசம் இரு தோள்களிலும் சுருண்டு கிடந்த பாங்கு அவருடைய அழகை மேலும் அழகு செய்தது. அவர் சென்நிறப் பட்டி அணிந்திருந்தார். இடதுகையைத் தன் இதயத்தின் மேலும் வலது கையை ஆலயத்தில் இருந்தவர்கள் மீதும் நீட்டி ஆசீர் வதித்தவண்ணம் காணப்பட்டார். அவ்வேளையில் ''இருக்கிறவர் நாமே'' என்ற சத்தம் ஒலித்தது.

இத்தரிசனத்தின் ஒளியினால் சிற்றாலயம் ஒளிர்ந்தது. சிற்றாலயத்தில் இருந்தோர் அக் காட்சியில் மூழ்கினர். சிலர் பரவசமாகினர். இன்னும் சிலர் மகிழ்வாலும் நன்றியாலும் கண்ணீர் விட்டனர். அங்கிருந்த சிலர் மௌனமாகினர். சிலர் திகைத்தனர். சிலர் பாடி மகிழ்ந்தனர். இத் தரிசனம் சுமார் 20 நிமிடங்கள் நீடித்தது என்று நற்கருணை எழுந்தேற்றம் செய்த புனித யூலாலி பங்கை சேர்ந்த தெலோற்றும், லொறேற்றோ திருக்குடும்பக் கன்னியர் இல்லத் தலைவியாக இருந்த அருட்செல்வி திரிநீற்றியும், பீடப் பரிசாரகராக பணியாற்றிய யோண் தெக்றதோவும், போர்டோவில் வாழ்ந்த செல்வி யூலாலி இலாக்கிரான்ஞ்சும் சாட்சியம் பகருகின்றனர்.



**நன்றியின் நல்லாண்டு**

உலகெங்கிலும் பரந்து வாழும் 5000 க்கும்மேற்பட்ட திருக்குடும்ப சபை அங்கத்தவர்கள் யாவரும் சபையை இறைவன் ஆசீர்வதித்த 175 ஆண்டை, மலர்ந்து மணம் கமழும் 1997 ஆம் ஆண்டு முழுவதும் பல்வேறு விதங்களில் கொண்டாடி மகிழ்கின்றனர். இந்த ஆன்மீக அனுபவத்தை ஆசீர்,ஒளி,வார்த்தை, பிரசன்னம் என்றரீதியில் தம் வாழ்வாக்கி, இறைவனுக்கு நன்றி கூறுவதில் செலவிட முனைகின்றனர். தமது அருங்கொடையாம் '' குடும்பங்களை உருவாக்கும்'' பாரிய

அருட்சகோதரி
நெவிஸ் .தி கு. க

பணிக்கு வீரத்துடனும் விசுவாசத்துடனும் முன்னேறிச் செல்ல அழைத்துக் கொண்டிருக்கும் இறைவனுக்கு இச் சபையினர் இந்த ஆண்டில் சிறப்பான தம் நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றனர். தனிநபர், குழுமங்கள்,மாகாணங்கள், பிரதிநிதித்துவங்கள், நாடுகள் என்ற ரீதியில், தத்தம் பண்பாடு கலாச்சாரங்களுக்கேற்ப, முழுத் திருக்குடும்ப சபையினரும் ஆராதனை, நன்றி ஆகியவற்றை தம் வாழ்வாலும் வார்த்தையாலும் சமர்ப்பிக்கின்றனர்.

சபைக்குக் கிடைத்த அனைத்து நன்மைகளுக்குக்காகவும், ஆசீர்வாதங்களுக்காகவும்; வளங்களுக்காகவும் அழைத்தல்களுக்காகவும், இறைவனின் பிரசன்னம், அவருடைய மாறாத அன்பு, இரக்கம், பராமரிப்பு, அருள் ஒளி, சக்தி, வழிநடத்துதல் புதிய பார்வைகள், புதிய வெளிச்சங்கள், இறைவாக்குரைக்கும் தன்மைகள், அவருடைய பிரமாணிக்கம், பலவீனங்களில் பக்கபலமாக இருந்த அவருடைய கருணை இவைகளுக்கு நன்றி கூறும் ஆண்டே நம்மவர்க்கு இந்த ஆண்டு ஆகும்.

## திருக்குடும்பச் சபையினர்

**யாழ் திருக்குடும்பச் சபையினரின் வாழ்வும் சமகாலப்பணிகளும்**

மனிதகுலம் கணணி உலகில் காலடி எடுத்து வைத்து தம் வெற்றிப் படைப்புகளில் களிபேருவகை அடையும் யுகம் இது. இவ் யுகத்தில் இறையரசைப் பரப்புவதில் இச்சபையினர் அதே வேகத்தில் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றனர். அன்பு, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் மனித மாண்பு, சமாதானத்திற்காக ஏங்குகின்ற எமது சமுதாயத்தில் ''குடும்பமாக வாழ்ந்து குடும்பத்தை அமைக்க'' உலகை ஒரு குடும்பமாக ஒன்

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

திருக்குடும்ப சபையினரின் விருது வாக்கு

இறைவனுக்கு
மட்டுமே
மகிமை

## இறையரசின்...

நிணைக்க, தம் வாழ்வை அர்ச்சனையாக்கி அயராது உழைக்கின்றனர்.

கடந்த 10 வருடங்களுக்கு மேலாகப் போரின் கொடுமையால் நசுக்கப்பட்டு சோர்ந்து பொலிவிழந்து, பொருளிழந்து, இருக்கும் இல்லங்களிழந்து, உறவுகள் இழந்து, இடமிழந்து குடும்பங்கள் பிரிந்து, கல்வி வசதிகள் இழந்து, ஏன் அடிப்படைத் தேவைகள் அனைத்தையும் இழந்து பரிதவித்துக்கொண்டிருக்கும் மக்கள் மத்தியிலே இவர்கள் ஒளிப்பிளம்புகளாக, அன்பின் இரக்கத்தின் நம்பிக்கையின் நற்சாட்சிகளாகி அவர்களின் இன்ப துன்பங்களில் இரண்டறக் கலக்கின்றனர். போரின் கொடுமையால் சமுதாயத்தில் பாதிக்கப்பட்ட விதவைகள், அநாதைகள், அங்கவீனர், கைவிடப்பட்ட வயோதிபர், மனநோயாளர், தனித்து வாழ்வோர், உள்ளம் உடைந்தோர், வாழ்வில் விரக்தியின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டோர், இடம்பெயர்ந்தோர் அகதிகள் காயமுற்றோர் போன்ற வலுவிழந்தோருக்கு வாழ்வளிப்பதற்காக இவர்கள் தங்கள் பணிகளைப் பரவலாக்கி வாழ்வதில் உத்வேகத்துடன் செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். நமது தனி வாழ்விலும், குழும வாழ்விலும், பணி வாழ்விலும் வலுவிழந்தவர்க்கு இழைக்கப்படும் எல்லாவித பாகுபாடுகளுக்கும் எதிராக நின்று மனித மாண்பை உறுதிப்படுத்த, கல்விப்பணி, பங்குப்பணி, குடும்பத் தரிசிப்பு மறைக்கல்விப்பணி, முறைசாராக்கல்வி, உளவளத்துணை, இடம்பெயர்ந்து முகாம்களில் வாழ்வோருக்கான பணி, தாதிச்சேவை, முதியோர் பராமரிப்பு, நற்செய்தி அறிவிப்பு, திருவழிபாடுகளுக்கு ஊக்குவிப்பு, செபக்குழுக்களை ஊக்குவித்தல் போன்ற நாடுகளில் நற்செய்தி அறிவிப்பு இன்னோரன்ன பணிகளைச் செய்கின்றனர். ஒடுக்கப்பட்டோரின் உரிமை வாழ்வுக்காக உழைப்போருடன் சேர்ந்து குரலெழுப்பும் இச்சபையினர், சமாதானத்துக்கு "ஒப்புரவு அவசியம் என்பதை வாழ்வின் பல்வேறு கோணங்களிலும் தம் பணிகளின் மூலம் வலியுறுத்தி நிற்கின்றனர். அன்பு, நட்புறவு, விருந்தோம்பல், இறையோடு இரண்டறக் கலந்த வாழ்வு, பரஸ்பர உரையாடல் மூலம் சமாதானத்திற்கான புதிய கதவுகளைத் திறக்க முயல்கின்றனர்.

"நாம் இப்பொழுது புதியனவற்றை உனக்கு அறிவிப்போம். இவை இப்பொழுது தான் படைக்கப்பட்டன; இந்தவேளையிலேயே; ஆம், இவை எமக்கு முன்பே தெரியுமென்று நீ சொல்ல முடியாது" (இசை 48 : 7)

ஆம், 21ஆம் ஆண்டில் எதிர்கொள்ள இருக்கும் புதிய வெளிப்பாடுகளையும், சவால்களையும் சந்திக்கக் காத்திருக்கும்யாழ்திருக்குடும்ப சபையினராகிய நாம் தெய்வ தரிசனத்துக்கு நன்றி விழா எடுக்கும் இந்த ஆண்டில், வரலாற்றினூடாக மக்களை அன்பிற்கு, அறத்திற்கு மனிதத்தின் நிறைவுக்கு தெய்வீக வாழ்வுக்கு அழைத்துக் கொண்டிருக்கும் தெய்வத்தை அவர் தரிசனமாகும் இடங்களிலெல்லாம் அடையாளம் காண்போம். உலகெல்லாம் பல்வேறு விதங்களில் கேட்கும் அவர் குரலுக்கு உன்னிப்பாகச் செவிமடுப்போம். இருண்ட, இறுகிய இதயங்களைத் திறந்து, இறையரசின் மதிப்பீடுகளால் கட்டப்படும் புதிய உலகை உருவாக்க ஓர் நாள் மனித குலம் யாவும், கிறிஸ்துவில் ஒன்றாகும் என்பதற்கு எம் அன்பு வாழ்வால் சாட்சியம் பகர புது உதயம் பெறுவோமாக. இதுவன்றோ நாம் அன்று தரிசனமாகிய அந்த அன்புத் தெய்வத்துக்கு, இன்று சமர்ப்பிக்கும் உகந்த, நன்றி, ஆராதனை, புகழ்ச்சி நிறை வழிபாடு ஆகும்.

---

## குருசுமுத்தண்ணையின் கிசு கிசு 96

அடை : என்ன அண்ணே எப்ப பார்த்தாலும் பகிரு பகிரு என்று சொல்லினம். அப்பிடி பகிர என்ன அண்ணே இருக்கு எங்களிட்ட.

குருசு : அடதம்பி. உங்களிட்ட ஒண்டும் இல்லை எண்டு யார் சொன்னது? முதலில பகிர மனம் இருக்க வேணும். அது இருந்தால் முகத்தில் புன் சிரிப்பாவது மற்றவருக்கு பகிருவாய். இப்ப அதைகூட பகிர மனமில்லாததால் தானே எத்தனை அழகு சாதனத்தை அள்ளிபூசியும் முகத்தில் ஒரு வெளிச்சமும் காண இல்லை.

அடைக்; சிரிச்சுப் பேசினா இருக்கிறதை கேட்டிடுவினம் எல்லோ அண்ணே!

குருசு: அடதம்பி தேக்கி வைப்பதால் நாற்றமடையுது சாக்கடை, பாய்ந்து செல்வதால் தூய்மை காப்பது நதி. இந்த இயற்கையைப் பார்த்தாயா?

## ஊர்காவற்றுறை ...

கூட்டுத் திருப்பலியில் பங்கு பற்றினார்கள். நன்றியுரையில் பங்குத்தந்தை போர்க்காலங்களில் ஆலயங்கள் புனரமைக்கப்படுவதும் வழிபாடுகள் நடாத்தப்படுவதும் மக்களின் மனங்களில் குடிகொண்டிருக்கின்ற போரின் ஆறாத காயங்களும் வடுக்களும் ஆறத் துணையாக இருக்கின்றன என்பதை விளக்கிக் கூறினார்.

தகவல்:
அருள்திரு. யூஜின்பிரான்சிஸ்

---

பெற்றோர்களே! இளம்பெண்களே! வாலிபர்களே! சிறுவர் சிறுமியர்களே! உங்களையும் யாழ் திருக்குடும்ப சபை அன்புக்கரம் நீட்டி அழைக்கின்றது.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி
மாகாணத் தலைவி
மாகாண இல்லம்
121, பிரதான வீதி
யாழ்ப்பாணம்.

## மீண்டும் FRA..,

செபமாலைத் தாசர்களின் குருக்கள், தலைவர்கள் ஆகியோர் தயவு செய்து உங்கள் கடந்த கால அனுபவங்கள்' எதிர் கால நிலைகள், பணிகள் பற்றிய விபரங்களை கட்டுரைகளாகவோ, குறிப்புக்களாகவோ அனுப்பி வையுங்கள். வன்னிப் பகுதியில் இருப்போரும் இவ்வன்பு வேண்டுகோளை உடன் ஏற்று உங்கள் ஆக்கங்களை தயவு செய்து அனுப்புங்கள்.

முகவரி:
அருட்திரு ரூடன் மரியாம்பிள்ளை, ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

---

விழுதுகள்... விழுதுகள்... விழுதுகள்... விழுதுகள்... விழுதுகள்... விழுதுகள்...

# விழுதுகள்

விழுதுகளுக்கு வணக்கம்!

சென்ற பாதுகாவலன் இதழ் சுவாமி ஞானப்பிரகாசியார் சிறப்பிதழாக அமைந்ததனால் உங்களுக்கு எழுத முடியவில்லை.

ஒரு சில கருத்துக்களும், ஆக்கங்களும் வந்திருந்தன. நன்றி. தொடர்ந்து எழுதுங்கள். பிரசுரிப்போம். தவக்காலம் ஆரம்பமாகி விட்டது.

பசாம், சிலுவைப்பாதை, ஒரு சந்தி போன்ற வழமையான வகையறாக்கள் ஆரம்பித்து விட்டன.

என்ன நீங்களும் இக்காலத்தை வழமையான ஒரு சில பக்தி முயற்சிகளோடு முடித்துக் கொள்ளப் போகிறீர்களா அல்லது அதன் பொருளுணர்ந்து வாழப் போகிறீர்களா?

மண்ணாகிப் போகும் மனித இருப்பை மற்றவர்களுக்கு எப்படிப் பயனுள்ளதாக்கலாம் என்று சிந்திக்கும் காலமே இது.

மரணத்தின் முகத்தில் தான் வாழ்வு பொருள் பெறுகிறது. கிறிஸ்தவர்களுக்கோ அது கிறிஸ்துவின் மரணத்தின் முகத்தில்.

சிலுவை மரத்தின் ( மரணத்தின் ) பொருள் தேடப் புறப்படுங்கள்.

அன்புடன்
சிநேகன்.

## நிலைக் கண்ணாடி

மூன்று நண்பர்கள் நீண்ட நாட்களின் பின் சந்தித்துக் கொண்டனர். அளவற்ற மகிழ்ச்சியுடன் மூன்று 'அதிஷ்டலாப' சீட்டுக்களையும் வாங்கினர்.

வாங்கியதுடன் நின்று விடவில்லை, ஆண்டவா எனக்கு பரிசு கிடைத்தால் உனக்கு இவ்வளவு தருவேன் என ஆளுக்காள் 'பொறுப்பாளர்' இறைவனுடன் பேரம்பேசிக் கொண்டனர்.

பல நாட்களின் பின் அவர்கள் மீண்டும் சந்தித்தனர். அப்பொழுதுதான் மூவருக்கும் பரிசு கிடைத்த சமாசாரம் தெரிய வந்தது. முதலாமவன் தான் கடவுளுக்கு சேர வேண்டியதை கொடுத்ததாக பெருமையாகக் கூறினான். இரண்டாமவனும் விடவில்லை· "நான் பேசியதைவிட அதிகமாகவே கொடுத்தேன்" என ஒரு போடு போட்டான். மூன்றாமவன் சற்று பெருமையாக "நான் ஆண்டவனுக்கு முழுவதையும் கொடுத்திட்டன். உங்களைப் போல கஞ்சத்தனம் காட்டேல"

என மூச்சிரைக்கக் கூறி முடித்தான். என்ன? முழுவதையுமா!

மற்ற இருவரும் திருதிருவென்று முழித்தனர். இவர்களைப் பார்த்த மூன்றாமவன் "நீங்க பணமாகக் குடுத்தீங்க – நான்.........

'சைன்வைக்காத செக்காக' குடுத்தன். அவ்வளவு தான் என்றானே பார்க்கலாம்!

இக் கதையை நகைச்சுவைக் கதையாகப் படித்த. ஞாபகம் உங்களுக்கு இருக்கலாம். அது இருக்கட்டும் இக்கதையில் எங்கள் சமூகமே தெரிகிறது!

இறைவனுடன் பேரம் பேசும் பலர் ஏதோ இறைவன், தாம் கொடுப்பதை எடுத்து காசேட்டில் வரவுவைக்கிறார் என எண்ணுகின்றார்கள் போலும்!

பாவம்! இந்தக் கம்பியூட்டர் யுகத்திலும் சிந்திக்கத் தெரிந்திருந்தும் தெரியாது போல் நாடகமாடும் பேர்வழிகள்.

நேர்த்தி என்ற போலி வலைக்குள் தாமாகவே அகப்பட்டு தங்களைத்தாங்களே திருப்திப் படுத்திக் கொள்கிறார்கள். போதாக் குறைக்கு "அனுபவமுள்ளவர்கள்" என்ற பதவி முத்திரையுடன் பாலக நெஞ்சங்களையும் பாழாக்கி விடுகிறார்கள்!

நாளைய சமுதாயத்தில் தலைவர்களாக மாறப் போகும் இன்றைய சந்ததியினரால்தான் இதை மாற்ற முடியும் – இறைவன் வழி செல்ல சமூகத்தை ஆயத்தப்படுத்த முடியும்.

என்ன? நாளைய குழந்தைகளுக்கு 'நேர்த்தி' என்ற போலி பற்றி தெரியக் கூடாது– தெரியமாட்டாது! நிறை வேற்றவேண்டிய பொறுப்பு உங்கள் கைகளில் "நிறைவேற்று........."

*மேலதிகமாக கேள்விகள் எழுந்தால் — "கொட்டப்பாக்கும் கொழுந்து வெத்தலையும்" உரலில் இட்டு இடித்தபடி இருக்கும் உங்கள் பாட்டன் பாட்டிமாரிடம் மட்டும் போகாதீர்கள்.

அன்புடன்,
M. F. நிரோஷன்
YR. $12B_2$
S. P. C

## பெண்கள் என்றாலே...

பெண்கள் என்றாலே ஆண்களுக்கு அழகுப்பொருளாகவும், தங்களது ஏளனப் பேச்சுக்களுக்கும் கேலிக்கூத்துக்களுக்கும் உரியதாகவும், ஏன் குடும்பங்களில் சுமை தாங்கிகளாகவும் விளங்குகிறது. ஏன் இவ்வாறு கணிக்கிறார்கள்? இறைவன் பெண்ணை படைப்பில் குறைந்தவளாகவா படைத்தார். அவளுக்கு அறிவுத்திறமை, ஆளுந்திறமை, பொறுப்புணர்ச்சி, அன்பு, இரக்கம், பரிவு, அழகு எல்லாமே இறைவனால் வழங்கப்பட்டுள்ளது. இவற்றை இறைத்திட்டத்திற்கு ஏற்ப பயன்படுத்துவது அவளது கடமை. ஆயினும் ஆண்களின் இம்சை பேச்சுக்களினாலும், புரிந்துணர்வற்ற தன்மையினாலும் மனித மாண்பற்ற செயல்களினாலும் தனது வாழ்வில் ஏற்படும் தடைகளை தாண்டியெழ முடியாது தவிக்கின்றாள்.

முன்னேற்றமடைந்த நாடுகள் ஓரளவு இதனை புரிந்து கொண்டாலும் அங்கேயும் முற்றாக இல்லை என்று கூற முடியாது. ஏன் எமது நாடு இதற்கு தள்ளுபடியா?

தனிமையில் ஒரு பெண் கடமையை செய்ய முனைகின்றாள் என்றால் எத்தனை தடையை எதிர்நோக்குவாள். நடமாடும் வீதியிலும் சரி, வழிபடும் கோயிலிலும் சரி, வேலை செய்யும் பணித்தளத்திலும் சரி, படிக்கின்ற பாடசாலையிலும் சரி, பல்கலை சாலையிலும் சரி, ஒவ்வொரு ஆணினத்தின் குறுக்கீடுகளை சொல்லிலும் செயலிலும் சிந்தனையிலும் உணருவாள். இதனால் தன்னில் மிளிரும் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் பண்புகள் தலைநீட்ட முன்னேறிச் செல்ல முடியாது தள்ளாடுவாள். பெண்ணினத்தின் அடக்கு முறைக்கு காரணம் ஆண்கள் தான் என்று வாதிடுவதுடன் இதனை சமூகம் ஏற்குமா? என்று கேட்டு விடைபெறுகிறேன்.

A. பமிலா.

## விண்ணக வாழ்வில் 20 ஆண்டுகள்



G. ஏபிரகாம் பற்றிக்

தோற்றம் மறைவு
16- 03- 1903 14- 02- 1977

"உயிர்ப்பும் உயிரும்நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
பூட்டப்பிள்ளைகள்.

A/10/97

## முதல் வருட நினைவு



திருமதி. எட்வேட் விக்ரோரியா
(பாக்கியம்)

அவனியில் ஆண்டவரில்
15- 02- 1914 17- 02- 1996

"என் இயேசுவே என் வாழ்நாவில் உம்மையே விரும்பினேன். இன்று உமது நிழலில் நான் இருக்கின்றேன்"

எமது அன்புத்தாயாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக யாழ். மரியன்னை பேராலயத்தில் 17.02.97 திங்கட் கிழமை காலை 6 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

பிரிவால் துயருறும்.
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
35/2 பழைய பூங்காவீதி,
யாழ்ப்பாணம்.

A/11/97

## 3ஆம் மாத நினைவு



ஜெ. றோய் மில்ரன்
(ஒட்டகப்புலம்)

அன்னையின் மடியில் ஆண்டவன் அடியில்
1987-05-07 1996-11-08

சின்ன யேசுவை இதயத்தில் சிறு காலம் பெற்று நீயும் அன்பர் யேசுவின் வாழ்வில் அகமகிழ்ந்து இருந்தாய் மில்ரனே!

22, சுவாட்ஸ் லேன்
யாழ்ப்பாணம்

A / 6 / 97

# பாகிஸ்தானில் வெள்ளி விழா

அமலமரித் தியாகிகள் சபைக் குருக்கள் பாகிஸ்தானில் பணியாற்றச் சென்று 25 வருடங்கள் பூர்த்தியாவதை அண்மையில் அங்கு கொண்டாடினர்.

மறைந்த பைசலபாத் ஆயர் பெனடிக்ற் சியலியோ அவர்களின் அழைப்பை யேற்று 1971இல் அ. ம. தி குருக்கள் மூவர் இலங்கையில் இருந்து அங்கு சென்றனர்.

இஸ்லாமிய நாடானபாகிஸ்தானில் தற்போது 15 அ.ம.தி குருக்கள் பணியாற்றுகின்றனர்.

25வது ஆண்டு நிறைவு வைபவம் ஆயர் யோண் யோசப் தலைமையிலான திருப்பலியுடன் சிறப்பாக நடைபெற்றது.

## 1ம் ஆண்டு நினைவு



சூசைப்பிள்ளை அல்பிரெட்
(உதவி முகாமையாளர், இலங்கை வங்கி, யாழ்ப்பாணம் மேற்றரக்கிளை)

அன்னையின் மடியில்
25- 09- 1947
ஆண்டவன் அடியில்
25- 02- 1996

நித்திய இளைப்பாற்றியை இவருக்கு அளித்தருளும், முடிவில்லாத ஒளி இவர்மேல் ஒளிர்வதாக.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 25-02-97 செவ்வாய் கிழமை காலை 6. 00 மணிக்கு யாழ். அருள் ஆச்சிரமத்திலும், யாழ். புனித மரியன்னை ஆலயத்திலும் திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்படும்.

மனைவி, பிள்ளைகள், சகோதரங்கள்.

A/9/97

## 3ஆம் மாத நினைவு



அன்ரன் மாகிறேட்

பிறப்பு இறப்பு
1943-11-10 1996-11-08

கண்களில் நீர் பொங்க
கருத்தினில் துயர் பொங்க.
மண்ணடியில் நீ உறங்க
மனம் வெதும்பி ஏங்குகிறோம்
மண்ணடியில் புகுந்தாலும்
விண் மடியில் இறைவனது
பொன்னடியில் நீயுறங்க
வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள்
சகோதரன், சகோதரிகள்
மருமகள், பேரப்பிள்ளைகள்
27/1, குருசோ வீதி
யாழ்ப்பாணம்.

A / 7 / 97

## 3 ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் மறைவு
02-10-1912 16-02-1994

அமரர் சவிரிப்பிள்ளை
மரியாம்பிள்ளை (உடையார்)

"சீவியத்தில் நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதீர்கள்"

எங்கள் பாசமிகு ஐயா
உங்கள் நினைவலைகள்
எங்களை விட்டகலாது.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
சில்லாலை

A/13/97

## இறை ஒளியில் இணைந்த முதலாண்டு நினைவஞ்சலி



யோண் ஏரோணி

மலர்வு உதிர்வு
20-07-1928 24-02-1996

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசங் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"
—அரு. 11:25—

வாழ்வும் வழியும்
வார்த்தையுமான வல்ல
தேவனே!
உலகுக்காய் உயிர் நீத்து
உயிர்த்த உத்தம இறைவா!
சூரிய கதிரின் பின் மின்னலென
மறைந்திட்ட அடியான்
ஜோண் ஏரோணியின் ஆன்
மாவுக்கு நித்திய பேரின்ப
வாழ்வை அளித்தருளும்.

இவரின் ஆன்ம சாந்திக்காக யாழ், புனித மரியன்னை பேராலயத்தில் 24-2-97 திங்கட் கிழமை காலை 11.00 மணிக்கு இரங்கற் பலி நிறைவேற்றப்படும்.

இவரின் பிரிவால்
வாடும்
மனைவி, சகோதரி
உற்றார், உறவினர்
"அருள்யோ" வாசா
41, பழைய பூங்கா வீதி
யாழ்ப்பாணம்.

A / 4 / 97



# சிறுவர் விருந்து

அன்பான தம்பி தங்கைகளே !

1997 ஆம் ஆண்டு யூபிலி ஆண்டின் மையக் கருத்தாகிய கிறீஸ்துவை அறிய இருக்கிறோம். 'மக்கள் என்னை யார் என்று சொல்கிறார்கள்? நீர் கடவுளின் மெசியா.'' இதைப் பற்றி அறிய புனித லூக்காஸ் நற்செய்தி அதிகாரம் 9 இல் 18 தொடக்கம் 21 வரை உள்ள வசனங்களை வேதாகமப் புத்தகத்தில் வாசித்து உங்கள் கருத்துக்களை எழுதுங்கள்.

தம்பி தங்கைகளே! உங்களுக்கு ஒரு வேண்டுகோள். கிறீஸ்துவை மையப் பொருளாகக் கொண்டு கட்டுரை, கவிதை, சிறுகதை, மன்றாட்டு என்பவற்றை எழுதி அனுப்புங்கள். தரமானவை பிரசரிக்கப்படும். காலந்தாழ்த்தாது உடனே செயற்படுங்கள்.

"சிறுவர் விருந்து" என்னும் பகுதியில் குறும்புதிர் 2 இல் உள்ள குறுக்கெழுத்துப் போட்டியில் பலர் பங்கு கொண்டுள்ளீர்கள். உங்கள் ஆர்வம் அக்காவுக்கு மிக்க மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. பெரும்பாலானோர் சரியான விடை எழுதியமையால் குலுக்கல் முறையில் அதிட்ட சாலிகளைத் தெரிந்துள்ளோம். ஏனையோர் கவலைப்படவும் வேண்டாம். சோர்ந்து போகவும் வேண்டாம். 'முயற்சி உயர்ச்சி தரும்'.

அன்புடன் சிசிலி அக்கா

குறும்புதிர் 2 இன் விடைகளும் வெற்றி பெற்றவர் விபரமும்.

விடைகள்

இடமிருந்து வலம்
1. அன்னை திரேசா
3. போதனைகள்
4. பாதகம்
5. கடவுள்
6. சாதனைகள்

மேலிருந்து கீழ்
1. அப்போஸ்தலர்கள்
2. திங்கள்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

பரிசு பெற்றோர்

1. சூ. நிமல்சி சென் செபஸ்ரியன் [illegible], சில்லாலை.
2. யசோதினி மகேந்திரன் கன்னியர் மடம் மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்.
3. கமிலஸ் அன்ரனி நாயகம் சில்லாலை.
4. மேரி இமெல்டா பத்திநாதர் திருக்குடும்ப ஆங்கிலக் கன்னியர் மடம், யாழ்ப்பாணம்.
5. வி. றோ. டெமற்றியஸ் 131, மவுண்காமல் வீதி யாழ்ப்பாணம்.
6. இ. அன்ரனிஸ்ரன் விஜயகுமார் றோ. க. ஆண்கள் பாடசாலை, இளவாலை.
7. ந. சிரோண் அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி.
8. லோறன்ஸ் றஜீவ் பெனடிற் புனித கென்றி அரசர் கல்லூரி, இளவாலை.

## குறும்புதிர் 3




இடமிருந்து வலம்
1. வீண் செலவு செய்பவன்.
3. மத்தி என்பதைக் குறிக்கும் சொல்.
4. பெண்ணுக்கு இப்படியும் ஒரு சொல் உண்டு.
6. கன்னிமை கெடாத புனிதர்களில் ஒருவர்.
8. நெருப்பு என்பதைக் குறிக்கும் ஓரெழுத்து.
9. சமயம் என்பதை இப்படியும் அழைப்பர்.
10. நடு நிசி என்றால் — ஆகும்.

மேலிருந்து கீழ்
1. பேச முடியாதவன்.
2. தாய் நாடு என்பதற்கு மறு பெயர்.
4. இக்காலத்தில் குளிர் அதிகம்.
5. மனித வாழ்க்கையில் விரும்பாதது.
7. நாம் ஏழைகளுக்குச் செய்ய வேண்டியது.

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## எம்கருத்து

### துறவறத்தாரின் இன்றைய பணிகள்.

வெவ்வேறு காலங்களிலும், நாடுகளிலும், குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்திசெய்யும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட துறவறச் சபைகளும், தம் அருங் கொடைகளைப் பயன்படுத்திச், சூழலுக்கு ஏற்ப வாழவும் பணியாற்றவும் முற்படுகின்றன. இக்காலத்தில் 175, 75 ஆண்டுகளாக எமது நாட்டிற் பல்வேறு பணிகளை மேற்கொண்ட திருக்குடும்பச் சபையையும், அப்போஸ்தலிக்கக் கார்மேல் சபையையும் வாழ்த்துகிறோம். அவர்களின் பணிகளால் எமது தலத் திருச்சபை வளர்ந்துள்ளது என்பதை அனைவரும் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்வர்.

இன்றைய எமது அரசியல் – பொருளாதார நிலை பெரிதுஞ் சீர்குலைந்து, நாம் பயணம் செய்யவேண்டிய பாதை பல சந்தர்ப்பங்களிலும் தெளிவில்லாது இருப்பதால் நாம் அங்கலாய்க்கும் சந்தர்ப்பங்கள் அதிகம் உண்டு. நம்பிக்கையீனங்களும் நிரந்தரமில்லாத நெறிகளும் எம்மை நிலைகுலையச் செய்கின்றன. அமைப்புக்கள் – கட்டடங்கள் அழிவுகளும்கூட எம்மைத் தடுமாறச் செய்கின்றன.

இவற்றின் காரணமாகத் தனிநபர்கள் மட்டுமல்லர், குழுக்களும், குடும்பங்களும், பங்குகளும், மறைமாவட்டமும் கூட இச்சூழலில் இறையரசின் விழுமியங்களுக்குச் சான்று பகர வழி தெரியாது இடர்ப்படுகின்றன.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பின் திருச்சபையின் பல்வேறு முன்னேற்றங்களையும், புதிய அறைகூவல்களையும் எதிர்நோக்குவதற்காகத் துறவறச் சபைகள் காலத்தின் அறிகுறிகளை உணர்ந்து, தேவைகளுக்கமைய வாழ – பணியாற்ற– செயற்படத் தம்மை மாற்றிக் கொண்டன – திருத்திக்கொண்டன. அவ்விதமாக மாறமுடியாத சபைகள் மறைந்து போயின, சில, வேறு சபைகளுடன் தம்மை இணைத்துக் கொண்டன.

ஆண்டவரின் ஆவியானவரே தமது திருச்சபையைத் தொடர்ந்து வழி நடத்தி வருகிறார். பல்வேறு காரணங்களால், சிறப்பாகக் குடும்பங்கள் பிளவுண்டு அனைத்தையும் இழந்து, நொந்து, வாழ்க்கைப் பயணத்தில் நொண்டிச் செல்லும் மக்களுக்கு, ஏனைய திருச்சபையின் அங்கத்தினர்போலத் துறவறச் சபைகளும் நம்பிக்கையூட்டுகின்றன. ஆண்டவரின் அன்புக் கரங்களாக அமைகின்றன. ஆதித் திருச்சபை வாழ முற்பட்ட விழுமியங்களுக்கு உருக் கொடுக்கின்றன. இத்தகைய உறவு வாழ்வைச் சூழ வாழ்வோர் கண்டுணர்வது மிக இன்றியமையாக் கடனாகும். பாரிய அமைப்புக்களும், கட்டட வசதிகளும், தொடர்புக் கருவிகளின் முறையான பயன்பாடுகளும் இன்று இறையரசைக் கட்டியெழுப்பும் பணியில் ஈடுபடுத்தப் படுவதற்கேயன்றி வேறெதற்குமன்று.

இன்றைய சமூகத்திலிருக்கும் அற்ப சொற்ப வசதிகளைப் போட்டி மனப்பான்மையுடன், 'நான் பெரியவன் / ள்' என்பதைப் பல்வேறு உலகியற் காரணங்களைக் காட்டித் தட்டிச்செல்ல முற்படும் எமது சமுதாயத்திற்கு, அன்பின் ஒருமிப்பு அவசியம். போட்டி பூசல்களைக் களையும் மனமும், நீதியோடு சிறப்பாக 'எளியோருக்கு முதலிடம்' என்ற பாணியிற் செயற்படும் பக்குவமும் தேவை. ஆண்டவர் கொடைகளை உய்த்துணர்ந்து அவற்றைப் பொதுநலனுக்காகப் பயன்படுத்தும் ஆர்வம் மிகவும் இன்றியமையாதது. இவ்விதம் குழுவிலும், ஊரிலும், பங்கிலும், தளத்திருச்சபையிலும் முன்னோடி இயக்குநர்களாக இச்சபையினர் திகழும்போது, புதியதொரு சமுதாயம் தொடர்ந்து புனரமைப்புச் செய்யப்படுகிறது. அனைவரும் இதனைத் தெளிவாகக் கண்டறிந்து அவர்கள் முன்மாதிரிகையைப் பின்பற்றுவார்கள் என்பது திண்ணம்.

### யாழ் மாகாண ...

றிய இவர் இப்போ அதன் மூன்றாவது முதல்வராகிறார். புனித பத்திரிசியார் கல்லூரியில் உபஅதிபராக பல ஆண்டுகள் சிறப்புப்பணியாற்றிய அருள்திரு. இயேசுநேசன் தன் புதிய பொறுப்புக்களைத் தற்போதைய முதல்வர் அருள் திரு. பி. பி. பிலிப்பிடமிருந்து இவ்வருடம் மே மாத மளவில் பெற்றுக்கொள்ளுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. பணி சிறக்க "பாதுகாவலன்" வாழ்த்துகிறான்.

### கனகத்தூத...

களை நேரில் கண்டறிய கனடாவிற்குப் போன போதே கனகத்தூதன் தனது 8வது இதழை யாழ், மன்னார் ஆயர்களை கௌரவிக்கும் முகமாக ஆயர் சிறப்பிதழாக வெளியிட்டுள்ளது.

சமாதானத்தை முன்னெடுப்பதற்கான பணியில் நல்லை ஆதினக் குருக்களுடன் யாழ் ஆயர் தோமஸ்சவுந்தரநாயகம் அவர்கள் உரையாடும் படம் ஈழத்து ஆயர்கள், ஆயர் சங்கத்துடன் திருத்தந்தையை சந்தித்தபடம் போன்ற பல படங்களுடன் வெளியிடப்பட்ட மேற்படி சிறப்பிதழின் முதல் இறுதிப் பக்கங்களுக்கு மன்னார், யாழ் ஆயர்களின் அழகிய படங்கள் மெருகூட்டுகின்றன.

### 31ம் நாள் நினைவு



அமரர் அ. சிறிசெல்வன்

"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும்என்னை மறவாதீர்கள்"

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 18-12-1944 | 17-01-1997 |

இறைவா!

எம் உறவில் கலந்து இவ் உலகில் வாழ்ந்த உம் அடியான் அ. சிறி செல்வன் அவர்களின் பாவங்களை மன்னித்து உமது நித்திய வான்வீட்டில் இணைத்துக் கொள்ள இரந்து மன்றாடுகின்றோம்.

இவரின் ஆன்மசாந்திக்காக புனித நீக்கிலார் தேவாலயத்தில் 15-02-97 சனிக்கிழமை காலை 6.30மணிக்கு நடைபெற்ற இரங்கல் பலியில் கலந்து கொண்டு செபித்தவர்களுக்கு நன்றி கூறுகிறோம்.

உற்றார், உறவினர்.

கடற்கரை வீதி.
நாவந்துறை.

A/12/97

### இயேசுவின் உயிர்ப்பு...

— யூபிலி ஆண்டின் கருத்துக்களை மையமாகக் கொண்டு, மக்கள் ஒன்று கூடும் இடங்களில், குறிப்பாக பங்குகளில் திருநின வழிபாடுகளை நடாத்துமாறு பணிக்கின்றோம்.

— சிறிய கிறிஸ்தவ குழுமங்களின் அவசியத்தை உணர்கின்ற இக்காலங்களில், பங்கு மட்டங்களிலே இவற்றை அறிமுகம் செய்து, இறைவார்த்தையடிப்படையிலான குழுமங்களை அமைக்க வேண்டுகின்றோம். அதற்கு மறைமாவட்ட கிறிஸ்தவ குழுமங்களுக்கான ஆணைக் குழுவிடம் இருந்து உதவிகளைப்பெற்றுக் கொள்ள முடியும்.

— இயேசுக் கிறிஸ்து எனக்கு யார்? என்ற கேள்வியே இவ் வருடத்தின் மையமாக இருப்பதால், அக்கேள்வி தரக்கூடிய ஆழமான, பொருள் செறிந்த விடையை, புனித மாற்கு எழுதிய நற்செய்தியூடாக கண்டடைய உறுதி பூணுவோம்.

— புதுப்பித்தலுக்கு இன்றியமையாதது மனம் திரும்புதல். இத்தவக்காலத்தில் உண்மையான மனந்திரும்புதலின் முக்கியத்துவத்தை உணர்ந்து, செப தபங்களிலும், அன்பு முயற்சிகளிலும் ஈடுபடுவோம்.

— எமது விசுவாசத்தை ஆழப்படுத்தவும், பாவத்தின் கனாகனத்தை அறிந்து, இறைவனோடு அன்புறவு கொள்ளவும், ஒப்புரவு அருட்சாதனத்தை சிறந்த ஆயத்தத்தோடு பெறுவோம். வேதாகம மன்னிப்பு வழிபாடுகளை நடத்துவோம்.

— எமது செப, தப முயற்சிகளின் பயனாய் அல்லது வெளிப்பாடாய், காணிக்கைகளை சேர்த்து திருச்சபையின் பிறர் துயர் துடைக்கும் அன்புச்செயல்களுக்கு உதவிடுவோம்.

முடிவுரை:-

கிறிஸ்தவ சகாப்தத்தின் 2000ஆம் வருடங்கள், ஓர் தடம் பதித்து செல்லும் முக்கிய நிகழ்வாகும். "அருள் தரும் ஆண்டாக" எம்மை அண்மித்து வரும் இந்நிகழ்வுக்காக ஆயத்தப் படுத்துவதில் முழுத்திருச்சபையும் முனைந்து நிற்கின்றது. எம் விடுதலையை நோக்கிய உரிமைகளுக்கான போராட்டத்தில் பல்வேறு அனர்த்தங்களுக்கு உட்படுத்தப்பட்ட நாம் இவ் வேளையில் கிறிஸ்து கொணர்ந்த முழு மனித விடுதலையை மறந்து விடமுடியாது. எனவே இவ்வாண்டிலும் எதிர் கொள்ள விருக்கின்ற வருடங்களிலும், இயேசுக் கிறிஸ்து மேல் கொண்ட விசுவாசத்தை ஆழப்படுத்தி, எம்மையும், திருச்சபையையும் புதுப்பித்துக் கொள்வோம், தனது தாய்மைப் பண்பினால் இயேசுக்கிறிஸ்துவைப் பெற்றெடுத்து, முன்னுயர்ந்த மரியாள் நம்மோடு இருந்து, நமக்கு துணை செய்வாராக.

ஆண்டவரில் உங்கள்மேல் பற்றுள்ள

\+ தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ். ஆயர்

ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்.
14-02-1997

### ஆயருக்கு விருது...

கிழக்கு திமோரின் தலைநகர் டிலியின் ஆயரான கார்லோஸ் பிலிப் பெலோ என்பவருக்கு '1996 ஒஸ்கார் றொமேரோ' என்ற விருது வழங்கப்பட்டுள்ளது.

ரோமின் தலைமையகமாக இயங்கும் அமைப்பு ஒன்று இதனை இவருக்கு வழங்கியுள்ளது.

கிழக்கு திமோரில் இடம் பெறும் சம்பவங்களில் நீதி, சமாதானம், மனித உரிமை பேன்றவற்றுக்காக இவர் உழைத்து வருவதையிட்டு இப்பரிசு வழங்கப்படுகிறது.

சான் சல்வடோற் எல்சல்வடோர் அமைதிக்காக பாடுபட்டதால் 1980 இல் படுகொலை செய்யப்பட்ட பேராயர் ஒஸ்கார்றொமேரோவின் நினைவாக இப்பரிசு வழங்கப்படுகிறது.

### சிறுவர் விருந்து...

#### கண்டு பிடியுங்கள்

1. 1996 ஆண்டு மார்கழி மாதத்தில் பரிசுத்த பாப்பரசரைச் சந்தித்துப் பேசிய சோசலிச நாட்டின் தலைவர் யார்? எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
2, மோட்ச பாதை எனும் நூலை எழுதிய நூலாசிரியர் யார்?
3. யோசவ்வாஸ் அடிகளாருக்கு முத்திப் பேறு பட்டம் யாரால் எங்கே எப்போ கொடுக்கப்பட்டது?
4. பூமிக்கு மிக அருகில் உள்ள நட்சத்திரம் எது?
5. வெள்ளை இரத்தமுள்ள பூச்சி எது?

விடைகள் யாவும் 10-03-97க்கு முன் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

அவர் கையில்தான் அனைத்து படைப்புக்களின் உயிரும் மனித இனத்தின் மூச்சும் உள்ளன (யோபு 12:10)

இப்பத்திரிகை புனிதவளன் கத்தோலிக்க அச்சக முகாமைமைாளரால் யாழ்ப்பாணம், பிரதான வீதி 360 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1997 ஆம் ஆண்டு மாசி 21ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. இல P 193